# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து
## வெள்ளிவிழாவை முன்னிட்டு
## நடாத்தும்

## கட்டுரை, கவிதைப்போட்டிகள்

1995 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற சுவிற்சர்லாந்து தமிழ்க் கல்விச்சேவை அதன் வெள்ளிவிழாவினை இவ்வாண்டு (2020) கொண்டாடுகிறது. இதனையிட்டு தமிழ்க் கல்விச்சேவையினால் கட்டுரை மற்றும் கவிதைப்போட்டிகள் நடாத்தப்பெறுகின்றன. இப் போட்டிகளில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், சுவிஸ்வாழ் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம். கீழ்ப்பிரிவு, இடைநிலைப் பிரிவு – 1 ஆகிய பிரிவுகளில், தமிழ்க் கல்விச்சேவையின் பள்ளிகளில் கற்றுவரும் மாணவர்கள் மட்டும் பங்குகொள்ளலாம். ஏனைய பிரிவுகளில் சுவிஸ் நாட்டில் வாழ்ந்துவரும் அனைவரும் பங்குகொள்ளலாம்.

| பிரிவுகள் | வயதுப்பிரிவு | பிறந்தநாள் |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | (7 – 11) வயது | 01.01.2009 - 31.12.2013 |
| இடைநிலைப் பிரிவு – 1 | (12 – 16) வயது | 01.01.2004 – 31.12.2008 |
| இடைநிலைப் பிரிவு – 2 | (17 – 21) வயது | 01.01.1999 – 31.12.2003 |
| மேற்பிரிவு | (22 – 27) வயது | 01.01.1993 – 31.12.1998 |
| அதிமேற்பிரிவு | 28 வயதும் அதற்கு மேலும் | 31.12.1992 ஆம் நாளும் அதற்கு முன்னரும் |

**கட்டுரைப்போட்டி**

| பிரிவு | தலைப்புகள் | சொற்கள் |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | 1. எம் தாய் மொழி<br>2. எம் தமிழ்ப்பள்ளி<br>3. அன்பு செய்வோம்<br>4. தமிழர் விளையாட்டுகள் | 50 – 75 சொற்கள் |
| இடைநிலைப் பிரிவு – 1 | 1. வெள்ளிவிழாக் காணும் தமிழ்க் கல்விச்சேவை<br>2. அறம் செய விரும்பு<br>3. தாய்மொழிக் கல்வியின் இன்றியமையாமை<br>4. தமிழ் எங்கள் உயிருக்குநேர் | 100 – 125 சொற்கள் |
| இடைநிலைப் பிரிவு – 2 | 1. வெள்ளிவிழா மகுடம் சூடும் தமிழ்க் கல்விச்சேவை<br>2. தாய்மொழிக் கல்வியின் பயன்<br>3. பழந்தமிழரும் அவர்தம் வாழ்வியலும்<br>4. தமிழர் கலைகள் | 175 – 200 சொற்கள் |
| மேற்பிரிவு | 1. சுவிற்சர்லாந்தில் தமிழ்க் கல்விச்சேவையின் பணி<br>2. கொரோனா பேரிடர் காலத்தைச் சுவிஸ் நாட்டில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் விதம்<br>3. புலம்பெயர் நாடுகளில் தமிழ்க்கல்வி<br>4. தமிழ்மொழிக்கல்வியின் எதிர்காலமும் இளையோர் பங்கும் | 200 – 250 சொற்கள் |
| அதிமேற்பிரிவு | 1. வானுயர ஓங்குக மாண்புறு தமிழ்க் கல்விச்சேவை<br>2. புலம்பெயர் தேசங்களில் தமிழர் பண்பாட்டினையும் கலைகளினையும் பேணிக்காத்தல்<br>3. தமிழர் வாழ்வியலும் நோய்த்தொற்றுத் தடுப்பும்<br>4. தாய்த்தமிழால் பெருமைபெற்று நிற்கிறோம் | 250 – 300 சொற்கள் |

**கவிதைப்போட்டி**

| பிரிவு | தலைப்புகள் | வரிகள் | |
|---|---|---|---|
| | | **ஆகக் குறைந்தது** | **ஆகக் கூடியது** |
| கீழ்ப்பிரிவு | 1. தமிழன்னைக்கு என் வணக்கம்<br>2. தாய்த்தமிழைக் கற்போம்<br>3. அழகான எங்கள் சுவிஸ் நாடு<br>4. தமிழ்ப்பள்ளியைப் போற்றுவோம் | 4 | 8 |
| இடைநிலைப் பிரிவு – 1 | 1. பாட்டெழுதி வாழ்த்துவோம் நம் தமிழ்ப்பள்ளியை<br>2. தமிழர் என்று சொல்லுவோம்! சிகரம் தொட்டு உயருவோம்!<br>3. நான் அறிந்த மொழிகளுள் என் தமிழ்மொழி…<br>4. வந்த வழி ஓடிவிடு 'கொவிட்' | 8 | 12 |
| இடைநிலைப் பிரிவு – 2 | 1. பாருக்குள்ளே நல்ல நாடு நம் தாய்நாடு<br>2. வெள்ளிவிழாக் காணும் கல்விச்சேவையே வாழி!<br>3. எங்கள் மஞ்சளுக்கு அஞ்சுகின்ற கொரோனா…<br>4. வாகை மயில் தோகை விரித்தாடுதே…. | 12 | 16 |
| மேற்பிரிவு | 1. செந்தமிழ் காக்கும் எம் தமிழ்க் கல்விச்சேவை<br>2. என்ன சொல்லிப் பாடுவேன் என்தமிழை<br>3. கொரோனா எமக்குச் சொன்ன பாடம்<br>4. கஞ்சி கேட்குது என் வயிறு… | 16 | 20 |
| அதிமேற்பிரிவு | 1. வேரோடி விழுதெறிந்து நிற்கும் தமிழ்க் கல்விச்சேவை..<br>2. செம்மொழியே சீரான நம் மொழியே!<br>3. உலகெங்கும் பரந்துவாழும் தமிழர் ஒன்றிணைந்தால்…<br>4. தமிழர் நாம் எத்தனை பேரிடர்கள் எதிர்கொண்டோம்? அத்தனையிலும் மீண்டெழுந்தோம்! | 20 | 24 |

- **முடிவு நாள்: 09.09.2020 ஆம் நாள் புதன்கிழமை** (முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கட்டுரைகள், கவிதைகள் போட்டிக்காக ஏற்றுக்கொள்ளப்பெறமாட்டாது).

- ஆக்கங்கள் அனைத்தும் **கையெழுத்துப் பிரதியாக** இருப்பதுடன், ஆக்கங்களுடன் போட்டியில் பங்குபற்றுபவரின் விபரங்களை உள்ளடக்கிய, **இத்துடன் இணைக்கப்பெற்றுள்ள படிவத்தையும் போட்டியாளர் கையெழுத்தில் நிறைவுசெய்து, கையொப்பமிட்டு தவறாது அனுப்பிவைத்தல்** வேண்டும். ஒவ்வொரு ஆக்கத்திற்கும் ஒவ்வொரு படிவம் இணைக்கப்பெறல் வேண்டும். **ஆக்கங்களில் போட்டியாளர் பெயர்களைக் குறிப்பிட வேண்டாம். தமிழ்க் கல்விச்சேவையின் மாணவர்களல்லாதவர்கள் தங்களின் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் நிழற்பிரதியினையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.**

- ஆக்கங்கள் அனைத்தும் A4 அளவு தாள்களில் எழுதப்பெறல் வேண்டும். இத் தாள்களின் ஒரு பக்கத்தினை மட்டும் பயன்படுத்துதல் வேண்டும்.

- ஆக்கங்களையும், முழுமைப்படுத்தப்பெற்ற படிவத்தையும், அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் நிழற்பிரதியினையும் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

  தபால் முகவரி: Tamil Education Service Switzerland,
  **Silver Jublee Competition,**
  Regensbergstrasse 238,
  8050 Zürich.

- ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்பெறும் சிறந்த 25 கட்டுரைகள், கவிதைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பெறுவதுடன் முதல் மூன்று போட்டியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பெறும்.

- முடிவுகள் 2020 ஒக்டோபர் 31 ஆம் நாள் அறியத்தரப்பெறுவதுடன் வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் அனுப்பிவைக்கப்பெறும். முடிவுகளினை அன்றைய நாள் தமிழ்க் கல்விச்சேவையின் இணையத்தளத்திலும், முகநூலிலும் பார்வையிடலாம். பரிசில்கள் 2021 ஆம் ஆண்டு நடைபெறும் வெள்ளிவிழா நிகழ்வில் வழங்கப்பெறும். அத்துடன் ஒவ்வொரு வயதுப்பிரிவிலும் தெரிவுசெய்யப்பெறும் முதல் மூன்று கட்டுரைகள், கவிதைகள் வெள்ளிவிழாப் போட்டி சிறப்புத் தொகுப்பில் பிரசுரிக்கப்பெறும்.

வயதுப் பிரிவுகளின் அடிப்படையில் அனைவரையும் இப்போட்டிகளில் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். மேலதிக விளக்கங்கள் ஏதாவது தேவைப்படுமிடத்து 044 440 2055 அல்லது 044 440 2056 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்புகொள்ள முடியும்.

நன்றி.

தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து.

30.07.2020